பக்கங்கள்: 10

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 தை 07 திங்கட்கிழமை 20.01.2025 கதிர் 073

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் பேசப்பட்ட எஞ்சிய விடயங்கள் குறித்து இன்று உங்களுடன் பகிர்ந்துகொள்வதாகத் தெரிவித்திருந்தேன். ஆனால், ☞2

# இலங்கையை மதச்சார்பற்ற நாடாக்கும் முழு முயற்சியில் தேசிய மக்கள் சக்தி ஈடுபாடு

## குற்றஞ்சாட்டுகின்றார் விமல் வீரவன்ஸ
## தேசிய அரசியல் தீவிரம் காட்டுவோம் என்கிறார்

இலங்கையைச் மதச் சார்பற்ற நாடாக மாற்றியமைக்கும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தேசிய மக்கள் சக்தி இருக்கின்றது. இலங்கையின் தேசியத்தைப் பாதுகாப்பதற்கான அரசியலில் மேலும் உத்வேகத்துடன் செயற்படவுள்ளோம் என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடு பொருளாதாரம் மற்றும் சமூகக் கட்டமைப்பில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. அத்துடன் அரசின் ஒருசில



செயற்பாடுகளால் நாட்டின் சுயாதீனம் ☞2

## மொரட்டுவவில் நேற்றிரவு பதற்றம்

மொரட்டுவ பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடி போராட்டத்தில் ஈடுபட்டதனால் நேற்றிரவு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. தமது பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் பலரைப் பொலிஸார் கைது செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் குழுமிய கூட்டத்தினராலேயே இந்தப் பதற்றம் ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவையில் உள்ள ஒரு தேவாலயம் ஒன்றின் திருவிழாவை முன்னிட்டு மின் விளக்கு அலங்காலங்களில் ஈடுபட்டிருந்த ஒரு குழுவினர் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து வந்தனர் என்ற குற்றச்சாட்டுக்களை அடுத்து போக்குவரத்துப் பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

அப்போது அங்கு திரண்ட பெரும் எண்ணிக்கையானவர்கள் பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தனர். அங்கு இடம்பெற்ற கைகலப்பில் இரு பொலிஸ் அதிகாரிகள் தாக்கப்பட்டுக் காயமடைந்தனர் என்றும் அவர்கள் பாணந்துறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். ☞2

## தனித்துக் களம் காண்கிறது விமல் வீரவன்ஸவின் கட்சி

விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, வரவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிடாத அந்தக் கட்சி, வேறு எந்த அரசியல் கட்சிகளுடனும் கூட்டணி அமைக்காமல், சுயாதீனமாகத் தேர்தலில் பங்கேற்க முடிவு செய்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில், விமல் வீரவன்சவும் பல கட்சிகளும் பிரபல வர்த்தகரான திலித் ஜெயவீரவுக்கு தங்கள் ஆதரவை வழங்கின. இருப்பினும், ஜெயவீரவின் தோல்வியைத் தொடர்ந்து, வீரவன்ச அடுத்தடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று முடிவு செய்தார். அந்த நேரத்தில், எதிர்காலத்தில் எந்தக் கட்சியுடனும் கூட்டணி அமைக்கப் போவதில்லை என்ற தனது முடிவை அவர் பகிரங்கமாக அறிவித்தார்.

அதன்படி, உள்ளூராட்சி மன்றங்களில் குறைந்தது 100 இடங்களைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தேசிய சுதந்திர முன்னணியை ஒரு சுயாதீன அமைப்பாக நிறுத்த வீரவன்ச தயாராகி வருகிறார்.

இந்த அறிவிப்புடன் இணைந்து, தேசிய சுதந்திர முன்னணியின் புதிய தலைமையகம் மற்றும் கலாசார மற்றும் அரசியல் மையம் நேற்று பத்தரமுல்லையில் உள்ள ராபர்ட் குணவர்தன மாவத்தையில் திறந்து வைக்கப்பட்டது. கட்சித் தலைவர் விமல் வீரவன்ச தலைமையில் மகா சங்கத்தினரின் ஆசிர்வாதத்துடன் இந்த திறப்பு விழா இடம்பெற்றது.

புதிதாக நிறுவப்பட்ட தலைமையகம், கட்சியின் பயணத்தில் ஒரு புதிய கட்டத்தைக் குறிக்கும் வகையில், தேசிய சுதந்திர முன்னணியின் அனைத்து அரசியல் மற்றும் கலாச்சார நடவடிக்கைகளையும் ஒருங்கிணைப்பதற்கான மையமாக செயல்படும் என்று விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

## முன்னாள் அமைச்சர் கைது

முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்களைப் பயன்படுத்தி வாகனத்தை ஒன்று சேர்த்ததோடு, அதற்காக போலி ஆவணங்களைத் தயாரித்த குற்றச்சாட்டின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இன்று அவர் பண்டாரவளை நீதிவானிடம் முற்படுத்தப்படவுள்ளார்.

வாக்குமூலம் வழங்குவதற்காக வலான மத்திய ஊழல் ஒழிப்பு பிரிவிற்கு வந்திருந்த சமயம் அவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் சுமார் 5 மணித்தியாலத்திற்கும் அதிகமான நேரம் வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் அவர் கைது செய்யப்பட்டார்.

அவரால் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டுப் பொருத்தப்பட்ட ☞2

## கல்கிஸையில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

### சுட்டவர் உடனடியாகக் கைது

கொழும்பு மாவட்டம், கல்கிஸை, சிறிபுர பிரதேசத்தில் நேற்று ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். சுட்டவரைத் தாம் உடனடியாகவே தெஹிவளையில் வைத்து துப்பாக்கியுடன் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வீதியில் சென்றுகொண்டிருந்த நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்-டுத் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்தவர்களுபோவில மருத்துவமனைக்கு எடுத்து விரையப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கல்கிஸை, - படோவிட, 2ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய சவிந்து தரிந்து என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர் டுபாயில் பதுங்கியுள்ள பாதாள உலகக் குழு ஒன்றின் தலைவரான 'கொஸ் மல்லி' என்பவரின் உறவினர் என்று பொலிஸார் நம்புகின்றனர். இவரைத் துப்பாக்கியால் சுட்டவர் 47 வயதுடையவர் என்றும், அவர் மற்றொரு பாதாள உலகக்குழுவான படோவிட்ட அசங்கவின் குழுவைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொஸ் மல்லிக்கும் படோவிட்ட அசங்கவிற்கும் இடையே நீண்டகாலமாக இருந்துவரும் தகராறின் விளைவாக இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் ☞2

## வல்வை பொலிஸ் நிலையத்தில் காவலில் இருந்த கைதி இறப்பு

### முழுமையான உடற்கூறாய்வுக்கு நீதிவான் உத்தரவு

யாழ். மாவட்டம், வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் உயிரிழந்திருக்கிறார். அவரது சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து முழுமையான ☞2

## மருந்தின் விலை ரூ. 76 ஆயிரம் இப்போது 370 ரூபாய் ஆகியது

### குட்டை உடைத்தார் சுகாதார பிரதி அமைச்சர்

புற்றுநோயாளிகளுக்கான மருந்து ஒன்றின் விலை 76 ஆயிரம் ரூபாயிலிருந்து தற்போது 370 ரூபாயாகி இருக்கின்றது என்று தெரிவித்திருக்கின்றார் சுகாதார பிரதி அமைச்சர் மருத்துவர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

''கடந்த காலங்களில் புற்றுநோயாளர்களுக்குத் தேவையான மருந்தை சுகாதார அமைச்சு வழங்கியிருந்தது. அற்கான ஒரு ஊசி மருந்தின் விலை எழுபத்தாறாயிரம் (76000) ரூபாயாகும். அந்த மருந்தை ஒரு நிறுவனமே கொண்டு வந்தது. நாங்கள் ஆட்சியைப் பொறுப்பேற்ற பிறகு, இந்த மருந்தைக் கொண்டு வர மூன்று நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அதன் பின்னர், அதே நிறுவனம் தற்போது முந்நூற்று எழுபது (370) ரூபாவிற்கு மருந்தை வழங்கவுள்ளது" என்று பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

அப்டவுன் பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சனிக்கிழமை அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்கள் சுகாதார அமைச்சு ஒரு மாதத்தில் காலாவதியான பில்லியன் கணக்கான ரூபாய் பெறுமதியான மருந்துகளை அழிக்கிறது. இப்படிக் காலாவதியான மருந்துகள் புத்தளம், சீமெந்துத் தொழிற்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் எரிக்கப்படுகின்றன.

இப்படிக் காலாவதியாகின்ற மருந்துகளை வழங்குபவர்கள் ☞2

## மக்களுக்கு வாக்குறுதி தந்தபடி ஊழல் அரசியலை ஒழிப்பேன்

### ஜனாதிபதி அநுர திட்டவட்டம்

மக்களுக்கு அளித்த வாக்குறுதிப்படி ஊழல் நிறைந்த அரசியலை ஒழிக்கப்பாடுபடுவேன் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

களுத்துறை, கட்டுகுருந்த, வெட்டுமகட பாகிஸ்தான் விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



நாங்கள் நவம்பர் 21 அமைச்சரவையில் 21 அமைச்சர்களுடன் பதவியேற்றோம். எம்மிடம் இராஜாங்க அமைச்சர்கள் இல்லை, கடந்த காலத்தில், களுத்துறையில் அமைச்சுப் பதவிகள் பேராசை கொண்டவையாக இருந்தன. எங்களிடம் களுத்துறையில் 8 நாடாளுமன்ற ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அதைவிட முக்கியமான தகவல் ஒன்றை உங்களோடுபகிர்ந்துகொள்ள இருக்கின்றேன்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வர இருக்கின்றது. பொதுத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் சவாரி செய்வதற்கு ரெலோவும் புளொட்டும் காட்டிய ஆர்வத்தை தமிழ் அரசுக் கட்சி கால் தூசிக்கும்கூட மதிக்காத காரணத்தால் இந்தத் தேர்தலைக் கடைசியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகவே எதிர்கொள்வது என்றுவவுனியாவில்நடந்தஅதன்தலைமைக் குழுக்கூட்டத்தில்முடிவுசெய்தனர். அதேநேரம் கஜேந்திரகுமாரின் அரசமைப்பு உருவாக்கம் தொடர்பான அரசியல் சந்திப்புக்களிலும் கலந்துகொண்டு, அந்தக் கட்சியுடனும் ஒரு கூட்டை உருவாக்க முடியுமா என்றும் பார்க்கின்றனர்.

இந்த இரண்டுக்கும் இடையில் அண்மையில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் புளொட் தலைவர் சித்தார்த்தனும் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமானசுமந்திரனோடுஉள்ளூராட்சி சபைத் தேர்தல் குறித்துப் பேசியிருக்கின்றனர். அப்போது வரவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இரு தரப்புக்களும் தனித் தனியே போட்டியிட்டுவிட்டுசேர்ந்துஆட்சியமைக்கலாம் என்பது தொடர்பிலும் பேசப்பட்டிருக்கின்றது.

இதைத்தான் 2022 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான அறிவிப்பை அடுத்துத் தமிழ் அரசுக் கட்சி யோசனையாக முன்வைத்தது. உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தல், பிரதிநிதித்துவ முறை மற்றும் தொகுதிவாரி நேரடித் தெரிவு முறை என்று இரண்டையும் கலந்த ஒன்று. இந்த முறைமையின் கீழ் எந்தவொரு கட்சியும் அறுதிப்பெரும்பான்மையைக்கைப்பற்றுவது முடியாத காரியம் என்பது நடந்து முடிந்த தேர்தலின்பட்டறிவு. அந்தப்பட்டறிவின்படியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்த கட்சிகள் தனித்தனியே உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்கொண்ட பின்னர், சேர்ந்து ஆட்சியமைக்கலாம் என்ற யோசனையை தமிழ் அரசுக் கட்சி முன்வைத்தது. இப்படித் தனித் தனியே போட்டியிடுவதன் மூலம் கூட்டப்பிற்கு அதிக ஆசனங்களைப் பெற்று தளம்பலற்ற, எதிர்க் கட்சிகளை நம்பியிருக்கத் தேவையில்லாத ஆட்சியை அமைக்கலாம் என்பதே திட்டம்.

இதைச் சரிவரப் புரிந்துகொள்ளாமல், தம்மைத் தனியே விட்டு தமது மக்கள் ஆதரவைதமிழ்அரசுக்கட்சிசோதித்துப்பார்க்க முயற்சிக்கிறது என்று பயந்த ரெலோவும் புளொட்டும் அதிகப் பிரசங்கித்தனமாக கூட்டமைப்பை தமிழ் அரசுக் கட்சி உடைத்துவிட்டது, கூட்டமைப்பிலிருந்து அது வெளியேறிவிட்டது என்றெல்லாம் அழிச்சாட்டியம் பண்ணின. அவர்களின் முன்னெடுப்புக்கள் தமிழ் அரசுக் கட்சிக்குச் சாதகமாகிப்போக, ஜனாதிபதித் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்தக் கட்சி தனது பலத்தை நிரூபித்தது. முன்னாள் ஆயுதக் குழுக்களுக்கு மக்கள் ஆதரவு இல்லைஅல்லதுமிகக்குறைவு, அவர்களுக்கு மக்களிடம் வாக்கு வங்கி இல்லை என்பதும் நிரூபணமானது.

இந்த நிலையில் தமிழ் அரசுக் கட்சி முன்வைத்த, குறிப்பாகசுமந்திரன்முன்வைத்த தனித்துப் போட்டியிட்ட பின்னர் உள்ளூராட்சி மன்றங்களில் சேர்ந்து ஆட்சியமைக்கலாம் என்கிற திட்டம் நல்லதுதான் என்று ரெலோ தலைவரும் புளொட் தலைவரும் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கின்றார்களாம். இதனை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் சுமந்திரனே தெரிவித்திருக்கின்றார். ஆக மொத்தத்தில் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தனது வேட்பாளர் பட்டியலில் தமக்கு இடம் தராது என்பது உறுதியானதும் தேர்தலுக்குப் பின்னராவது தமிழ் அரசுடன் சேர்ந்துகொண்டுஇணக்கமாகச்செயற்படுவது போன்று இருந்தால் அடுத்த மாகாண சபைத் தேர்தலிலாவது தமக்கு தமிழ் அரசுக் கட்சிப் பட்டியலில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள் போலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர்.

மக்களின் கருத்தை, முடிவை ஏற்றுக்கொண்டு அவர்கள் எதிர்பார்க்கும் அரசியலை முன்னெடுப்பதற்கும் தமது கட்சிகளை மக்கள் மத்தியில் வளர்த்தெடுப்பதற்கும்திராணியற்ற, வழிவகை நுட்பங்கள் அறியாத, அதற்கான தற்றுணிபு இல்லாத தலைவர்கள் இந்த மாதிரி குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதைத் தவிர வேறு வழிகளை தேடமாட்டார்கள் என்பது நிச்சயம். தமது சொந்தக் கட்சிகளையே தோல்வியிலிருந்து மீட்டெடுத்து மக்கள் மத்தியில் செல்வாக்கை உயர்த்த முடியாத, மற்றொரு கட்சியின் தயவில் தங்கியிருக்க விரும்பும் இவர்களை நம்பி வாக்களிப்பதைப் போன்ற முட்டாள்தனம் வேறொன்றும் இருக்கப்போவதில்லை.

மற்றுறொரு பக்கத்தில் சுமந்திரனும் பாவம், அவருக்கு முன்னாள் அவருக்கு ஏற்றமாதிரிக் கதைத்துவிட்டு பின்னால் எல்லாத்தவறுகளுக்கும்சுமந்திரனேகாரணம் என்று பச்சையாகப் பொய் கூறக்கூடிய இந்தத் தலைவர்களைப் பற்றி இன்னும் அறியாமல் அவர்கள் சொல்வதை நம்பி அதை ஊடகங்களிடமும் பகிர்ந்துகொள்ளும் அவரது அப்பாவித்தனத்தை என்னவென்று சொல்வதென்று புரியவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கையை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

இலங்கையின்தேசியத்துக்குமுன்னுரிமை வழங்கி இந்த அரசு செயற்படாது. புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து தற்போது பேசப்படுகின்றது. இலங்கையைச் மதச் சார்பற்ற நாடாக மாற்றியமைக்கும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தவர்கள் இந்த அரசில் முன்னிலை பதவிகளில் உள்ளார்கள். அரசும் அந்த நிலைப்பாட்டில்தான் உள்ளது.

மாற்றத்துக்காகவேமக்கள்புதியவர்களைத் தெரிவு செய்தார்கள். ஆனால், புதியவர்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி எவ்விடத்திலும் பேசுவதில்லை. அவர்களைத் தெரிவுசெய்ததன்பயனைமக்கள்அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

அதிகாரத்தில் இருக்கும்போதும், இல்லாதபோதும் மக்களின் பிரச்சினைகளுக்காகவும், உரிமைகளுக்காகவும் நாங்கள் குரல் கொடுப்போம். தேசியத்தைப் பாதுகாத்தால் மாத்திரமே இலங்கை என்ற அடிப்படையில் முன்னேறமுடியும்.

தேசியத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் நாம் ஈடுபடவுள்ளோம். கடந்த காலங்களைக் காட்டிலும் இனி உத்வேகத்துடன் செயற்படுவோம்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாகத் தற்போது செயற்படுகின்றது. ஆகவே, இந்த அரசுக்குக் கடந்த காலத்தை நினைவுபடுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது - என்றார்.

## வல்வை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடற்கூறாய்வுக்கு உட்படுத்துமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் விஜயராணி உத்தரவிட்டார்.

உயிரிழந்தவரான வல்வெட்டித்துறை, தீருவில் பகுதியைச் சேர்ந்த சந்திரபாலன் (வயது- 45) பருத்தித்துறை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணையின்படியே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அப்போது அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதைத் தொடர்ந்து ஊரணி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார் என்றும் எனினும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனால் அவரது இறப்பில் தமக்குச் சந்தேகம் உள்ளது என்று குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் பொலிஸார் தாக்கியிருக்கக்கூடும் என்றும் அவர்கள் சந்தேகிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில்வைக்கப்பட்டிருந்த நிலையில்நேற்றுஅங்குசென்றபருத்தித்துறை பதில்நீதிவான் விஜயராணி விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்து முழுமையானஉடற்கூறாய்வுஅறிக்கையைப் பெற்று நீதிமன்றில் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

உயிரிழந்த சந்திரபாலன் வழக்கு விசாரணை ஒன்றுக்காகக் கைது செய்யப்பட்டிருந்தார். அவரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் அழைத்து வந்தபோது நீதிமன்ற வாயிலில் இறங்கித் தப்பியோடியிருந்தார். இதையடுத்து பருத்தித்துறை நீதிமன்றத்தால் அவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

# மட்டு. மாவட்டத்தில் தொடரும் மழை; பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின





மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாக பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கடந்த 24 மணி நேரத்தில் மட்டக்களப்பு நவகரி பிரதேசத்தில் 92 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய காத்தான்குடி, காத்தான்குடி, ஆரையம்பதி, வாகரை, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, வாழைச்சேனை, ஏறாவூர் உட்பட பல பிரதேச செயலக பிரிவுகளில் பல வீதிகள் அடைமழை காரணமாக நீரில் மூழ்கியுள்ளன.

தொடர்ந்தும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மழை பெய்யும் என மாவட்ட வானிலைஅவதானநிலையம்தெரிவித்துள்ளது.

# அமெ. சர்வதேச மருத்துவ சுகாதார கழக ஏற்பாட்டில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குருதி வங்கி



சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் குருதி வங்கியானது பசுந்தேசம் அமைப்பின் வேண்டுகோளுக்குஅமைவாகஅமெரிக்காவை தளமாக கொண்டு இயங்கும் சர்வதேச மருத்துவ சுகாதார கழத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட நிலையில், இந்த குருதி வங்கிக்கு நிரந்தர மருத்துவராக மருத்துவர் பிரதீபன் அண்மையில் நியமிக்கப்பட்டார். தற்போதுகுருதிவங்கியானதுபதிவுசெய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக இலங்கையின் தேசிய குருதி வங்கிகளின் இணையத்துடன் ஒன்றிணைக்கப்பட்டநிலையில்முதன்முதலாக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) குருதிக்கொடை நிகழ்வு நடைபெற்றது.

இந்தக் குருதிக்கொடை நிகழ்வுக்கு பசுந்தேசம் அமைப்பு, விதையனைத்தும் விருட்சம்அமைப்பு, இயற்கையின்நண்பர்கள் இயக்கம் உள்ளிட்ட பொது அமைப்புகள் அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக கருத்துரைத்த பசுந்தேசம் அமைப்பின் தலைவர் திரு.த.துளசிராம் -

இன்று (நேற்று) முதல் தென்மராட்சி பகுதியில்குருதிக்கொடைசெய்யவிரும்புபவர்கள் சாவகச்சேரிஆதாரவைத்தியசாலையின்குருதி வங்கியுடன் தொடர்புகொண்டு அவர்களின் ஊடாக குருதிக்கொடை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகனம்கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதுபோன்ற வேறு வாகனங்களையும் அவர் சட்டவிரோதமாகப் பொருத்தியுள்ளாரா என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

## ரூ. 76 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றவாளிகள். ஆனால் அவர்கள் சட்டப்பூர்வமாகவே இவற்றைச் செய்கிறார்கள் என்பதால்எல்லாவற்றையும்மாற்றவேண்டும். அதற்குநாம்நடவடிக்கைஎடுக்கின்றோம். எல்லாவற்றையும்செய்வதால், பலபிரச்சனைகளைச் சந்திக்கிறோம். சில நேரங்களில் பத்திரிகையாளர்கள் எங்களிடம் கேள்விகள் கேட்கிறார்கள், இவர்களில் பலர் 'மீடியா ஐடி' வைத்திருக்கிறார்கள், ஆனால் அவர்கள் மருந்து நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள், அவர்கள் எங்களிடமிருந்துதகவல்களைப்பெறபேசுகிறார்கள். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் நிறைந்தநாடுஇது, தேசியஅளவில்மேலிருந்து கீழ்வரை அதனை அனுபவிக்கின்றோம் - என்றார்.

## கல்கிஸையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு மோட்டார் சைக்கிளில்தப்பிச்சென்றசந்தேகநபரைத்தாம் கைத்துப்பாக்கியுடன் கைது செய்தனர் என்று தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடந்த சிறிது நேரத்திலேயே தெஹிவளை தர்ம வீதியில் வைத்து அவரைத் தாம் கைது செய்தனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர். அவரை மோட்டார் சைக்கிளில் ஏற்று வந்தவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

## மொரட்டுவவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமைமற்றும்தாக்குதல்நடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் 5 பேர் கைது செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து நேற்றிரவு 11 மணியளவில் மொரட்டுவ பொலிஸ் நிலையத்தின் முன்பாகக் கூடிய நூறுக்கும்மேற்பட்டவர்களால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. தமது பகுதியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டதற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். கைதானவர்கள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும் அசம்பாவிதங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்காக அருட்தந்தை சிரில் காமினி உட்பட பல பாதிரியார்களும் அங்கு வருகைதந்திருந்தனர்.

## மக்களுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களும் 1 அமைச்சரும் உள்ளனர். ஒருநாட்டைக்கட்டியெழுப்புவதன்குறிக்கோள், நாடாளுமன்றஉறுப்பினர்களுக்குசலுகைகள் வழங்குவது அல்ல. கடந்த காலத்தில் அப்படிச் செய்யப்படவில்லை. அப்படிப்பட்ட ஆளும்தரப்பால்எங்களால்மட்டுமேஉருவாக்க முடியும், வேறு யாராலும் முடியாது.

முன்பு அமைச்சர் பதவிகள் உறவினர்களிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டன. முன்பு அமைசுக்களில்ஊழியர்களாகஅமைச்சர்களின் உறவினர்கள்தான் சேர்க்கப்பட்டார்கள். மனைவி பிரத்தியேக செயலாளராகவும், குடுப்பத்தினருக்குப்பதவிகள் வழங்கப்பட்டன. இந்த நிலை இப்போது மாற்றப்பட்டுள்ளது. இன்று, எந்த அமைச்சரையும் பின் தொடர்ந்து வாகனங்களோ அல்லது பொலிஸ் உத்தியோகத்தர்களோ இல்லை. ஆளும்தரப்பில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, எதிர்க்கட்சியினருக்கும்கூட இல்லை. ஏனென்றால் பொலிஸ் துறைக்கு 21,000 போதாது. அவர்கள் மிகவும் கடினமாக உழைக்கிறார்கள் - என்றார்.

# ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறை ஏதோ ஒரு வகையில் தொடரவேண்டும்

## அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்து

ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையானது ஏதேனுமொரு மட்டத்தில் தொடரவேண்டியது அவசியம் என வலியுறுத்தியுள்ள சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், ஏனெனில் இலங்கையில் மீறல்கள் எவையும் இடம்பெறவில்லை என அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் கூறிவருவதை நிராகரிக்கும் பொறிமுறையாக இதுவே இருக்கிறது எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் காலநீடிப்பு செய்யப்பட்ட 57ஃ1 தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர்மாதத்துடன் முடிவுக்குவரும் நிலையில், இலங்கையில் இடம்பெற்ற கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத்திரட்டும் பொறிமுறை எவ்வகையிலேனும் தொடரவேண்டியது அவசியம் என சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினரும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் பெப்ரவரி 24 ஆம் திகதி ஆரம்பமாகி, ஏப்ரல் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்ற வேளையிலேயே இலங்கையில் ஜனாதிபதித்தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.



அதனையடுத்து இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தலைப்பிலான தீர்மானம் வாக்கெடுப்பின்றி மேலும் ஒருவருடகாலத்துக்குக் காலநீடிப்பு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்டவாறு ஓராண்டுக்கு காலநீடிப்பு செய்யப்பட்ட தீர்மானம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடருடன் முடிவுக்கு வருகிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விவகாரம் தொடர்பான அடுத்தகட்ட அணுகுமுறை எவ்வாறிருக்கப்போகிறது என நன்கறியப்பட்ட மனித உரிமைகள் செயற்பாட்டாளரான அம்பிகா சற்குணநாதனிடம் வினவியபோது, உலகளாவிய ரீதியில் பல்வேறு பிரச்சினைகள் முக்கிய கவனம் பெற்றிருப்பதால், எதிர்வரும் செப்ரெம்பர் மாதக்கூட்டத்தொடரின்போது இலங்கை தொடர்பானதீர்மானம் புதுப்பிக்கப்படுமா? அல்லது புதியதொரு பிரேரணை கொண்டுவரப்படுமா? என்பது பற்றி உத்தரவாதமாகக் கூறமுடியாது எனத் தெரிவித்தார்.

இருப்பினும்ஐநாமனிதஉரிமைகள்உயர்ஸ்தானிகர் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டும் பொறிமுறையானது ஏதேனுமொரு மட்டத்தில் தொடரவேண்டியது அவசியம் என வலியுறுத்திய அவர், ஏனெனில் இலங்கையில் மீறல்கள் எவையும் இடம்பெறவில்லை என அரசாங்கங்கள் தொடர்ச்சியாகக் கூறிவருவதை நிராகரிக்கும்பொறிமுறையாக இதுவே இருக்கிறது எனச் சுட்டிக்காட்டினார்.

# பிரித்தானிய இந்தோ - பசுபிக் செயலர் ஜனவரி 26 இல் இலங்கை வருகின்றார்

பிரித்தானியாவின் இந்தோ பசுபிக் பிராந்தியத்துக்கான வெளியுறவுச் செயலர் கத்தரின் வெஸ்ட் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை இலங்கைக்கு வருகை தரும் அவர், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்களைச் சந்தித்து உரையாடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து சில பிரதான அரசியல் கட்சிகளின் முக்கிய பிரமுகர்களையும் சந்திக்கவுள்ள அவர், சிவில் அமைப்புக்களின் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்.

அதனையடுத்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, வட மாகாண ஆளுநர் வேதநாயகன், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், யாழ். வர்த்தக சங்கத்தினர் மற்றும் சிவில் தரப்பினர் உள்ளிட்டவர்களை சந்திக்கவுள்ளார்.

தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறீசற்குணராஜாவுடன் சந்திப்பில் ஈடுபடவுள்ள அவர், யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள தரைக்கீழ் நீர் மற்றும் காலநிலை மாற்றம் சம்பந்தமான நிகழ்விலும் பங்கேற்கவுள்ளார்.

பிரித்தானியாவின் ஆளும் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான கத்தரின் வெஸ்ட் இலங்கை யுத்தத்தில் இழக்கப்பட்ட உயிர்களுக்கான நியாயமான நீதி மற்றும் பொறுப்புக்கூறலை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளதோடு கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் வெளிவிவகார அலுவலகத்தில் இந்தோ-பசுபிக் பிராந்திய செயலராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஓட்டோ விபத்தில் மூன்று பேர் காயம்

(கேதீஸ்)



கொத்மலைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட லபுக்கலை தேயிலை தொழிற்சாலைக்கு அருகில்வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற ஓட்டோவிபத்தில், சாரதி உட்பட ஓட்டோவில் பயணித்த மூவர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து நானுஓயாவை நோக்கி பயணித்த ஓட்டோ ஒன்று கண்டி நுவரெலியா பிரதான வீதியின் லபுக்கலை தோட்ட தொழிற்சாலைக்கு அருகில் பிரதான வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்திலுள்ள தேயிலை தோட்டத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தவிபத்தில் காயமடைந்த சாரதி உட்பட மூவரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொத்மலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பலநோக்கு கூட்டுறவுச் சங்க புதிய பணியிட திறப்பு விழா

(சினீஸ் கான்)



ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் புதிய காரியாலய திறப்பு விழா சங்கத்தின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.எம்.எஸ். ஹாறூன் ஸஹ்வியின் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வும் கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆணையாளர் பி.தனேஸ்வரனும் கலந்து கொண்டனர்.



மேலும் திணைக்களத்தின் அதிகாரிகள் கூட்டுறவு சங்கத்தின் பனிப்பாளர் சபை உறுப்பினர்கள், ஊர் பிரமுகர்கள் என பலரும் கலந்து கொண்டு வைபவ ரீதியாக இக்காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மட்ஃ ஓட்டமாவடி தேசியபாடசாலையின் கேட்போர் கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சங்கத்தின் முன்பள்ளி பாலர் பாடசாலை மாணவர் விடுகை விழா நிகழ்விலும் அதிதிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வெற்றுப் பேச்சல்ல செயலே முக்கியம்

இலங்கையின் ஆட்சியாளர்கள் தங்களின் தோல்வியின் விளிம்பில் எடுக்கும் ஆயுதம் இனவாதம் ஆகும். ஆனால் தேசிய மக்கள் சக்தி ஒரு காலமும் இனவாதத்தை கையில் எடுக்காது என்று பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் பிரபல எழுத்தாளர் வி.மைக்கல் கொலினின் எழுதிய 'அன்பின் முத்தங்கள்' கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று மட்டக்களப்பு தமிழ் சங்கத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

'எமக்கு எந்தவித பாதிப்புகள் வந்தாலும் நாம் ஒரு காலமும் இனவாதத்தை கையில் எடுக்கப்போவதில்லை என்ற உத்தரவாதத்தை நான் உங்களுக்கு தருகின்றேன்" என்றார் அவர்.

அவர் மட்டுமல்ல ஆளும் தரப்பில் பலரும் இந்தக் கருத்தை அவ்வப்போது பதிவு செய்கிறார்கள். பிரதமர் ஹரினி அடிக்கடி இந்த விடயத்தை அழுத்திப் பேசுகின்றார். இன்னும் ஒருபடி மேலே சென்று மற்றவர்கள் இனவாதம் பேசுவதற்கும் தமது ஆளும்தரப்பு இடமளிக்காது என்றும் அவர் உறுதியளிக்கின்றார்.

ஆளும் தரப்பு அத்தகைய கொள்கை நிலைப்பாட்டில் இருந்தால் அது மிக நல்லதுதான். சிறப்பானதுதான். இலங்கையின் எதிர்காலத்தை சிறப்பாக வடிவமைப்பதற்கு அந்தக் கொள்கை இன்றியமையாததாக இருக்கும். ஆனால், அது வெறும் முழக்கமாக மட்டும் இருக்கக்கூடாது, நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாகவும் இருக்கவேண்டும்.

இன்று ஆட்சியைப் பிடித்துள்ள தேசிய மக்கள் சக்தியின் முதுகெலும்பான ஜேவிபி இனவாதத்தைக் கையிலெடுக்காத ஒரு கட்சியல்ல என்பது அனைவரும் அறிந்த உண்மை. தொடக்கத்தில் தமிழ் இன விடுதலைப் போரை இடதுசாரியக் கண்ணோட்டத்தில் ஒரு விடுதலைப் போராட்டமாக அணுகிய ஜேவிபி தேர்தல்களில் அடைந்த தோல்விகளின் பின்னராக அதைப் பயங்கரவாதப் போராட்டமாகக் காட்டி இனவாதத்தைக் கையிலெடுத்து தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஆட்சியாளர்கள் முன்னெடுத்த போர்களுக்கு முழு ஆதரவு வழங்கியது மட்டுமல்ல, இலங்கைப் படைகளுக்கு ஆட்களையும் திரட்டிக் கொடுத்தது.

சிங்களஇனவாதம்ஒன்றேதாம்அதிகாரத்தைக்கைப்பற்றுவதற்கான வழி வகை என்று சர்ந்தர்ப்பவாத அரசியலை அன்று கையிலெடுத்த ஜேவிபி, அறகலய மக்கள் கிளர்ச்சியில் அனைத்து இன மக்களும் இன, மத, வர்க்க வேறுபாடுகளைக் கடந்து ஒன்றிணைந்தபோது தனது இனவாத அரசியல் முகத்தை மூடிக்கொண்டது. போர் முடிவுக்கு வந்ததும் தமிழர் போராட்டம் ஒடுக்கப்பட்டதும்கூட ஜேவிபியின் இந்த மாற்றத்திற்கு வழிவிட்ட காரணங்கள் எனலாம். இப்போது அதிகாரத்திலிருந்துகொண்டு இனவாதமற்ற ஆட்சியை அது வழங்குகின்றதா என்றால், அது சந்தேகத்திற்கு இடமற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்பதே தமிழர்களின் நிலைப்பாடு.

இனவாதம் என்பது தேர்தல் மேடைகளில் அள்ளி வீசப்படும் முழக்கம் மட்டுமல்ல. இனவாதமற்ற அணுகுமுறை ஆளும் தரப்பின் அனைத்து மட்டங்களிலும் கடைப்பிடிக்கப்படவேண்டும். உணர்த்தப்படவேண்டும். இந்த ஆட்சியாளர்கள் இனவாதமற்றவர்கள் என்று சிங்களப் பெரும்பான்மையினம் தவிர்ந்த ஏனைய மக்கள் அனைவரும் மனதார நம்பவேண்டும். அதற்கேற்ற வகையில் நகர்வுகள் இருக்கவேண்டும்.

ஆளும்தரப்பின்நகர்வுகள்அப்படியிருப்பதாகச்சொல்லிவிடமுடியாது. அமைச்சரவை நியமனம் அதற்கொரு உதாரணம். நாட்டின் அனைத்து இன, தேசிய மக்களையும் பிரதிநித்துவப்படுத்தும் வகையில் அமைச்சரவை நியமனம் வழங்கப்படவில்லை. இனவாதமற்று தமது சிங்கள அமைச்சர்கள் செயற்படுவார்கள் என்பதே அதற்கான ஆளும் தரப்பின் விளக்கமாக இருந்தது. தமிழ், முஸ்லிம் அமைச்சர்களை நியமித்தால் அவர்கள் இனவாதமாகச் செயற்படுவார்கள் என்பதுதான் ஆளும் தரப்பின் நிலைப்பாடா என்று இதற்கு எதிர்க்கேள்வி எழுப்பமுடியும். அதுவல்ல முக்கியம், இலங்கையின் அனைத்து இனத்தவர்களும் சமமாகவும் சமத்துவமாகவும் இனவாதக் கண்ணோட்டம் அற்றும் நடத்தப்படுகின்றார்கள் என்று ஆளும் தரப்பு தனது ஒவ்வொரு செயலிலும் காட்டவேண்டும் நிரூபிக்கவேண்டும். அதைவிடுத்து இனவாதமில்லை, இனவாதமில்லை என்று மேடைகளில் பேசுவதால் மட்டும் இனவாதம் இல்லாமல் போய்விடாது.

அமைச்சரவை ஒரு உதாரணம் மட்–டுமே. 'தூய சிறீலங்கா' செயலணி வரைக்கும் இனவாதம் தொடர்பில் ஆளும்தரப்பு மீது தமிழ், முஸ்லிம் மக்கள் சந்தேகம் கொள்ளும் வகையிலேயே இதுவரையான நகர்வுகள் இருந்துள்ளன. இனவாதத்தை ஒழிக்கவேண்டுமாயின் ஆளும்தரப்பின் நாடி நரம்புகள் அனைத்திலும் அந்தச் சிந்தனை ஓடவேண்டும். தேசிய மக்கள் சக்தியும் ஜேவிபியும் அத்தனை புனிதர்களாக இதுவரையில் தம்மை நிலைநிறுத்தவில்லை என்பதே உண்மை. எனவே மேடைகளில் குரல் எழுப்புவதைவிட்டுத்து செயலில் தமிழ், முஸ்லிம் மக்கள் நம்பும் வகையில் ஆளும்தரப்பின் ஒவ்வொரு செயலையும் வடிவமைப்பதே இங்கு முக்கியமானது.

# ட்ரம்பின் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படக்கூடியனவா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



கிரீன்லாந்து அமெரிக்க தேசிய பாதுகாப்பிற்கு இன்றியமையாதது என்றும், அத்தீவை மீட்டெடுக்கவேண்டும் எனவும் டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.

அதேவேளை பனாமா கால்வாய் - கிரீன்லாந்தின் கட்டுப்பாட்டைப் பெற இராணுவ பலத்தைப் பயன்படுத்துவதை டொனால்ட் டிரம்ப் இதுவரை நிராகரிக்க மறுத்துவிட்டார். அத்துடன் மெக்ஸிகோ வளைகுடாவை 'அமெரிக்க வளைகுடா' என்று மறுபெயரிட முயற்சிப்பதாகவும் டிரம்ப் கூறியுள்ளார்.

### இராணுவ பலப் பிரயோகம்:

பனாமா கால்வாய்- கிரீன்லாந்தி, இரண்டின் மீதும் அமெரிக்க கட்டுப் பாட்டை மீளப் பெறுவது வெறுமனே அமெரிக்க தேசிய பாதுகாப்பிற்கு இன்றியமையாதது என்ற டிரம்பின் கருத்துக்கள், பிராந்திய விரிவாக்கம் குறித்து சுயநிர்ணயத்திற்கு முன்னுரிமை அளித்த பல தசாப்த கால அமெரிக்க கொள்கையை நிராகரிப்பதைக் குறிக்கிறது.

உலகின் மிகப்பெரிய தீவை அமெரிக்க ஏற்றுக்கொள்வதற்காக, டிரம்ப் பல ஆண்டுகளாக தீவை வாங்கவும் முயற்சித்துள்ளார். ஐரோப்பாவிலிருந்து வட அமெரிக்காவிற்கு குறுகிய பாதை ஆர்டிக் தீவு வழியாகச் செல்வதால், கிரீன்லாந்து அமெரிக்க இராணுவத்திற்கும் அதன் பாலஸ்டிக் ஏவுகணை முன்னெச்சரிக்கை அமைப்புக்கும் மூலோபாய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு நோக்கங்களுக்காக அமெரிக்கர்களுக்கு கிரீன்லாந்து தேவை. கிரீன்லாந்து கனிம, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு செல்வத்தையும் கொண்டுள்ளது. ஆனால் வளர்ச்சி மெதுவாகவே உள்ளது என்றும் டிரம்ப் கூறியுள்ளார்.

### கிரீன்லாந்தை வாங்க முடியுமா?

கிரீன்லாந்து டென்மார்க்கின் ஒரு பகுதியாகும். இது 1953இல் நோர்டிக் இராச்சியத்தின் முறையான பிரதேசமாக மாறியதுடன், டேனிஷ் அரசமைப்பிற்கும் உட்பட்டது. அதாவது அதன் சட்டப்பூர்வ நிலையில் எந்த




மாற்றத்திற்கும் அரசமைப்பு திருத்தம் தேவைப்படும்.

ஆர்க்டிக் தேசத்தை வாங்க முடியும் என்ற யோசனைக்கு டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து அரசுகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்துள்ளன. நாங்கள் விற்பனைக்கு இல்லை, ஒருபோதும் விற்பனைக்கு இருக்கமாட்டோம் என்று கிரீன்லாந்து பிரதமர் மியூட் எகெட் கூறினார்.

தங்கள் எதிர்காலத்தை முடிவு செய்வது கிரின்லாந்து மக்களின் விருப்பம் என்று கூறினார். டேனிஷ் மற்றும் அமெரிக்கர்கள்உட்பட மற்றவர்கள்தங்கள் கருத்துக்களுக்கு உரிமையுடையவர்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

நீண்டகாலஅமெரிக்கநட்புநாடாகவும், நேட்டோவின் உறுப்பினராகவும் உள்ள டென்மார்க்கிலிருந்து சுதந்திரத்தை அறிவிக்கும் உரிமை இந்த தீவுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2009ஆம் ஆண்டில், இந்த தீவுக்கு பரந்த சுயாட்சியும் வழங்கப்பட்டது.

### கிரீன்லாந்து சுதந்திரம் அடையுமா ?

கிரீன்லாந்து சுதந்திரம் அடைந்தால், அது அமெரிக்காவுடன் இணைந்திருக்கலாம் என்றும் கூறப்பட்டது. டென்மார்க் நாடாளுமன்றத்தின் கிரீன்லாந்து உறுப்பினரான ஆஜா கெம்னிட்ஸ், அமெரிக்கா கையகப்படுத்தும் யோசனையை உறுதியாக நிராகரிக்க வேண்டும் என்று கூறினார்.

டென்மார்க்நாட்டை உள்ளடக்கிதனது பேரரசை திட்டத்தை விரிவுபடுத்தும்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# ட்ரம்பின்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

டிரம்பின் கனவுகளில் டென்மார்க் நாடு பகடைக்காயாக இருக்க விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை கிரீன்லாந்தின் மீதான டென்மார்க்கின் உரிமை கோரலின் நியாயத்தன்மை குறித்து டிரம்ப் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளார். டென்மார்க்கிற்கு ஏதேனும் சட்டப்பூர்வ உரிமை இருக்கிறதா என்றுகூட மக்களுக்குத் தெரியாது, ஆனால் அவர்கள் அவ்வாறு செய்தால், அவர்கள் அதை விட்டுவிட வேண்டும், ஏனென்றால் அது அமெரிக்க தேசிய பாதுகாப்புக்கு தேவை என்றும் தெரிவித்தார்.

டென்மார்க் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் டிரம்பின் கருத்துக்களைக் குறிப்பிட்டு, டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன், அமெரிக்கா டென்மார்க்கின் மிக முக்கியமான மற்றும் நெருங்கிய நட்பு நாடு என்று கூறினார். ஆனால் கிரீன்லாந்தின் கட்டுப்பாட்டைப் பெற வாஷிங்டன் இராணுவ அல்லது பொருளாதார சக்தியைப் பயன்படுத்தும் என்று தான் நம்பவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

ஆர்க்டிக் பிராந்தியத்தில் அமெரிக்கா அதிக அக்கறை காட்டுவதை வரவேற்கிறார் என்று திருமதி ஃபிரடெரிக்சன் கூறினார். ஆனால் அது கிரீன்லாந்து மக்களை மதிக்கும் வகையில் செய்யப்படவேண்டும். அதே நேரத்தில் டென்மார்க்கும் அமெரிக்காவும் நேட்டோவில் இன்னும் ஒத்துழைத்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

### பனாமா கால்வாய் யாருக்கு சொந்தம்?

பனாமா கால்வாயானது அட்லாண்டிக் பசிபிக் பெருங்கடலை இணைக்கும் ஒரு முக்கிய நீர்வழிப் பாதையாகும். இந்த பனாமா கால்வாயை மீண்டும் கைப்பற்ற டிரம் அச்சுறுத்தி வருகிறார்.

மீண்டும் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப் பனாமா நீர்வழியைப் பயன்படுத்துவதற்கு அதிக கட்டணம் வசூலிப்பதாக குற்றம் சாட்டி, பனாமா கால்வாயின் மீது அமெரிக்க கட்டுப்பாட்டை மீண்டும் பெறுவது பற்றி அறிவித்துள்ளார்.

சட்டப்படி பனாமா கால்வாய் ஆணையத்தின் மூலம் 25 ஆண்டுகளாக பனாமா ஆளும்தரப்பு கால்வாயை சொந்தமாக வைத்து இயக்கி வருகிறது. அமெரிக்கா 1979ஆம் ஆண்டு பனாமா கால்வாயை அந்நாட்டிற்கு திருப்பி அளித்தது. மேலும் 1999ஆம் ஆண்டு மூலோபாய நீர்வழியைக் கட்டுப்படுத்துவதில் அதன் கூட்டாண்மையை முடிவுக்கும் கொண்டு வந்தது.

ட்ரம்பின் தற்போதைய கருத்துக்களுக்கு பதிலளிக்கும் விதமாக, பனாமா அதன் கடல்சார் கால்வாயின் இறையாண்மை பேரம் பேச முடியாதது என்று கூறியுள்ளது.

இந்தக் கால்வாயின் இறையாண்மை பேரம் பேசக்கூடியது அல்ல, மேலும் அது பனாமா போராட்ட வரலாற்றின் ஒரு பகுதியாகும் என்று வெளியுறவு அமைச்சர் ஜேவியர் மார்டினெஸ்-அச்சா கூறியுள்ளார். இவ்வாறே ஜனாதிபதி ஜோஸ் ரால் முலினோ தனது நிலைப்பாட்டையும் தெளிவுபடுத்தி உள்ளார்.

### கனடா அமெரிக்காவுடன் இணையுமா?

கனடா அமெரிக்காவுடன் இணைய வேண்டும் என்று டிரம்ப் தொடர்ந்து வலியுறுத்தியுள்ளார். ஆனால் அதைச் செய்ய ‘பொருளாதார பலத்தையே நம்பியிருப்பதாகக் கூறியுள்ளார். மேலும் அமெரிக்காவின் பொருளாதார பொற்காலத்துக்கு உறுதியளித்த டிரம்ப், மெக்சிகோ வளைகுடாவை ‘அமெரிக்க வளைகுடா‘ என்று மறுபெயரிட முயற்சிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் கிழக்கு - மேற்கு கடற்கரைகளில் உள்ள கடல் பகுதிகள், கிழக்கு மெக்சிகோ வளைகுடா மற்றும் அலாஸ்காவின் வடக்கு பெரிங் கடலின் சில பகுதிகளை எதிர்கால எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு குத்தகையிலிருந்து பாதுகாக்க பைடன் அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தியது.

ஆனால், டிரம்ப் தலைமையிலான அரசு பதவியேற்கும் முதல் நாளிலேயே அதை மீண்டும் வழங்கப் போவதாகக் கூறியுள்ளது. மேலும் தேவைப்பட்டால் நீதிமன்றங்களுக்கு இவ்வழக்கை எடுத்துச் செல்வதாகவும் உறுதியளித்தார்.

# போலி ஆவணம் மூலம் அரச காணி விற்ற அரச பணியாளர் பொலிஸாரினால் கைது

அரச காணி ஒன்றை போலி ஆவணம் தயாரித்து 22 மில்லியன் ரூபாவுக்கு விற்னை செய்த குற்றச்சாட்டில் வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, பம்பைமடு பகுதியில் உள்ள அரச காணி ஒன்றை போலி ஆவணங்கள் மூலம் 22 மில்லியன் ரூபாவுக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என வவுனியா மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த உத்தியோகத்தரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

100

## ‘தூய ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டம்:

# சாய்ந்தமருது பெரியபள்ளியில் சனிக்கிழமையன்று சிரமதானம்

(ஸாகிர்)

‘செழுமையான தேசம் அழகான வாழ்வு’ என்ற தூர நோக்கை அடையும் விதத்தில் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ செயற்றிட்டத்தின் கீழ் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் சனிக்கிழமை சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது ஜும்ஆப் பள்ளிவாசலின் செயலாளர், பொருளாளர் மற்றும் பள்ளிவாசலில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.




# கற்பிட்டி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம்

(சியாஜ்)

கற்பிட்டி பிரதேச செயலகத்தின் 2025 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஒருங்கிணைப்பு குழு கூட்டம் வெள்ளிக்கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் பிரதேச செயலாளர் மிலங்க பிரசாத் ஏற்பாட்டில் கற்பிட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஜே.எம் பைசல் தலைமையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அஜித் கிஹான், கயான் ஜானக மற்றும் தேசிய மக்கள் சக்தியின் கற்பிட்டி பிரதேச இணைப்பாளர் சிவகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அத்தோடு கற்பிட்டி பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள், நிர்வாக கிராம உத்தியோகத்தர், கற்பிட்டி விஜயா கடற்படைத் தளபதி, கற்பிட்டி மற்றும் நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், கற்பிட்டி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி, கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர், பாலக்குடா விவசாய ஆராய்ச்சி நிலைய பொறுப்பதிகாரி, கண்டக்குளி வன ஜீவி அலுவலக அதிகாரிகள், கடற்றொழில் அலுவலக அதிகாரிகள், கல்விப் பணிப்பாளர், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வீடமைப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதில் கற்பிட்டி பிரதேச சுகாதார மற்றும் சுற்றுச்சூழல், உல்லாச பயணத்துறை, கடற்றொழில் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலை , மீன்பிடி முறை பற்றியும், மழை வெள்ளத்தின் தாக்கம் விவசாய உற்பத்தியின் பாதிப்புக்கள், காட்டாக்காளி மாடுகளால் ஏற்படும் பாதிப்புக்கள் அதற்காக பிரதேச சபையால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் போதைப் பொருள் பாவனை அதனை இல்லாது ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளபட வேண்டியதன் அவசியம் என பல்வேறு அபிவிருத்தி திட்ட செயற்பாடுகள் மற்றும் கற்பிட்டி பிரதேசத்தில் காணப்படும் குறைபாடுகள் அடிப்படை தேவைப்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





# 12 வாகன பற்றரிகளுடன் ஒருவர் வவுனியா நெளுக்குளத்தில் கைது

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் 12 வாகன பற்றரிகளை மகேந்திரா ரக வாகனத்தில் ஏற்றிச் சென்ற ஒருவரை கைது செய்துள்ளதுடன், வாகனத்தையும் கைப்பற்றியுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.எம்.பி.ஆர்.கே.திவுல்வெள தலைமையிலான பொலிஸ் குழுவினர் நெளுக்குளம் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போதே குறித்த மகேந்திரா ரக வாகனத்தை சோதனைக்குட்படுத்திய போது வாகனத்தில் 12 வாகன பற்றரிகளை மீட்டெடுத்துள்ளனர். இதனையடுத்து குறித்த வாகன பற்றிகளை ஏற்றிச்சென்ற வாகனத்தின் சாரதியை கைது செய்ததுடன், அவ்வாகனத்தினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வாகன உரிமையாளர்கள் பற்றிரிகள் எவையும் களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் உடனடியாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திலோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ முறைப்பாட்டினை வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த நான்கு வாரத்திற்கு முன்னர் வவுனியா, நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள வாகன தரிப்பிடம் ஒன்றில் வாகன பற்றரிகளை களவாடிய குற்றச்சாட்டில் நான்கு வாகன பற்றரிகளுடன் இருவரை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்தமையும் குறிப்பிடத்தக்கது. 100





# 'ஐஸ்' போதையுடன் மருதமுனையில் அதிரடிப்படையினரால் ஒருவர் கைது

(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை பிரதேச வைத்தியசாலை வீதியில் ஐஸ் போதைப் பொருளுடன் வெள்ளிக்கிழமை இரவு 10.00 மணியளவில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

பெரியநீலாவணை 02, மருதமுனை பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய சந்தேக நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிராம் 20 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த கைது நடவடிக்கை கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# சேனநாயக்கவின் நீர்த்தேக்க வான்கதவுகள் திறக்கப்பட்டன

## அம்பாறை – கண்டி வீதி போக்குவரத்து தடை

(றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடைமழை காரணமாக இம்மாவட்;டத்தின் டி.எஸ். சேனநாயக்கசமுத்திரத்தின்ஐந்து வான்கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப் பட்டுக்கொண்டிருப்பதால்இம்மாவட்டத்தில் உள்ள தாழ்நிலப் பிரதேசங்களில் உள்ள மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறைமாவட்ட பிரதிப்பணிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக தாழ்நிலப் பகுதிகள் முற்றாக மூழ்கியுள்ளன. கன மழை காரணமாக அம்பாறை-கண்டி பிரதான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளதால் அம்பாறை மாவட்டத்தில் இருந்து கண்டி நோக்கி பயணிக்கும் பயணிகள் வேறு போக்குவரத்துபாதையைப்பயன்படுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவதாகவும் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை களியோடை ஆற்றுப் பகுதியை அண்டியுள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் சுமார் 10 ஆயிரம் மாணவர்களையும் வெள்ள நிலைமையிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு அங்குள்ளவிடுதிகளில்தங்கியுள்ளமாணவர்களை பாதுகாப்பானபகுதிகளில்தங்கவைப்பதற்கான வேலைத்திட்டத்தினையும்மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக நிர்வாகத்தினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பணிப்பாளர் றியாஸ் தெரிவித்தார்.

கடந்த 24 மணி நேரத்தில் அம்பாறை மாவட்டத்தின் எக்கல்ஓயா பகுதியில் 123.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி அதிகப்படியாக பதிவாகியுள்ளதுடன், இங்கினியாகலை பிரதேசத்தில் 120.0 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், அம்பாறை நகர்ப் பகுதியில் 103.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பன்னலகம பகுதியில் 100.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பொத்துவில் பிரதேசத்தில் 71.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வளிமண்டலவியல்திணைக்களத்தின்அம்பாறை மாவட்ட வானிலை அவதான நிலைத்தின் மூலமாக தெரிவிக்கப்படுகின்றது.

பலத்த மழையால் அம்பாறை நகரிலிருந்து ஹாடி தொழில்நுட்பவியல் கல்லூரிப் பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள சுதுவெல்ல பகுதியில் உள்ள நீர் நிலை முழுமையாக நிரம்பியுள்ளதால் இப்பிரதேசத்திற்கு செல்கின்ற மக்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதவிர, ஒலுவில் அஷ்ரஃப் நகர்ப் பிரதான பாதை சிதைவடைந்துள்ளதால் இப்பகுதி மக்களும் பாதுகாப்பாக செயற்படுமாறு வேண்டிக்கொள்ளப் படுகின்றனர்.

டி.எஸ்.சேனநாயக்க சமுத்திரத்தின் மூலமாக வெளியேற்றப்படும் மேலதிக நீர் கல்லோயா ஆற்றின் மூலம் பிரதானமாகச் செல்வதால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களான அம்பாறை, தமண, மகாஓயா, உகன, சம்மாந்துறை, காரைதீவு, சாய்ந்தமருது, நற்பிட்டிமுனை, நாவிதன்வெளி, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, இறக்காமம், திருக்கோவில், பொத்துவில் உள்ளிட்ட பிரதேசங்களில் தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு மதஸ்தலங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் மூலமும் ஒலிபெருக்கி வாயிலாக அறிவுறுத்தப்படுகின்றன.

அதிக மழை வீழ்ச்சி காரணமாக இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட ஆயிரக்கணக்கான விவசாயச் செய்கைகள் பாதிப்படைந்துள்ளன. அறுவடைக்குத் தயாராக இருந்து நெல் விவசாயச் செய்கைக்கு மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

இதேவேளை, கடற்றொழிலில் ஈடுபட்டு வருபவர்கள் தமது மீன்பிடி படகுகள் வள்ளங்கள் போன்றவற்றை கடற்கரையிலிருந்து அப்புறப்படுத்தி கரையொதுக்கி வைத்துள்ளனர். கடல் அலைகளின் வீரியம் இம்மாவட்டத்தில் அதிகரித்து காணப்படுவதால் கடல் அலை சுமார் 15 அடிக்கு மேல் எழுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தின் சில பிரதேசங்களில் முதலைகள், பாம்புகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் விசஜந்துக்கள் போன்றவற்றின் நடமாட்டம் அதிகமுள்ளதால் பொது மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும், வெள்ள நிலைமையை பார்ப்பதற்கான செல்பவர்களும், நீர் பகுதிகளில் தேவையற்ற வகையில் நடமாடுவதுடன் நீராடுவதை தவிர்ப்பதோடு, கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் அனர்த்த முகாமைத்து மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் மேலும் தெரிவித்தார்.



# வேட்டைக்காரர்களின் வலையில் சிக்கி சிறுத்தை செத்திருக்கலாம்

## கால்நடை வைத்திய அதிகாரி தகவல்

(கேதீஸ்)

புசல்லாவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நயப்பனை மேல் பிரிவு தோட்டத்தில், தேயிலை மலையிலிருந்து சிறுத்தையின் சடலம் கடந்த வியாழக்கிழமை மீட்கப்பட்டது.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக போடப்பட்டிருந்த கம்பி வலையில் சிறுத்தை சிக்கி இந்தச் சிறுத்தை உயிரிழந்திருக்கலாம் என ரன்தெனிகல கால்நடை வைத்திய பிரிவின் கால்நடை வைத்தியர் அகலங்க பினிடிய தெரிவித்தார்.

உயிரிழந்த சிறுத்தையின் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரன்தெனிகல கால்நடை வைத்திய பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியர் அகலங்க பினிடிய மேலும் தெரிவித்தார்.

இந்த விலங்கின் பிரேத பரிசோதனையை எதிர்வரும் நாள்களில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் 2025ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்தில் பதிவான முதல் சிறுத்தைச் சாவு இதுவெனவும் வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.





# கிழக்குப் பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை அறிவிப்பு

(ஹமீட்)

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் இன்று(திங்கட்கிழமை) விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இந்தநாள்களில்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் பரீட்சைகள் நடைபெறுவதால் இன்று (திங்கட்கிழமை) நடைபெறவிருந்த பரீட்சை பாடங்கள் 2025.01.25 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளன.

# பாவற்குளத்தின் நீர்வரத்து அதிகரிப்பு நான்கு வான்கதவுகள் திறக்கப்பட்டன

## மக்களை அவதானமாக இருக்குமாறு கோரிக்கை

பாவற்குளத்தின் நீர்மட்டம் தொடர்ந்தும் அதிகரித்து வருவதால் அதன் 4 வான் கவுகள் திறக்கப்பட்டுள்ளதால் அதன் கீழ் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களைத் தொடர்ந்தும் அவதானமாக இருக்குமாறு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வவுனியாவில் கடந்த சில நாள்களாக தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருவகின்றது. இதன் காரணமாக பல குளங்களின் நீர்மட்டம் அதிகரித்து வான் பாய்ந்து வருவதுடன் பாவற்குளத்தின் நீர்மட்டமும் சடுதியாக அதிகரித்துள்ளது.

பாவற்குளத்தின் நீர்மட்டமானது அதன் கொள்ளவான 19.4 அடியை அடைந்துள்ளதால், அதன் நான்கு வான் கதவுகள் 6 அங்குலத்திற்கு திறக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொடர்ந்தும் மழை பெய்து வருவதால் மேலும் வான் கதவுகள் ஊடாக நீர்பாயும் வீதத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

இதனால் பாவற்குளத்தின் நீர் வழிந்தோடும் பகுதிகளில் உள்ள கந்தசாமி நகர், கிறிஸ்தவகுளம், பாவற்குளம் படிவம் 5,6,4,2,1, பீடியாபாமின் வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் மிகவும் அவதானமாகவும், முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

அத்துடன், நெளுக்குளம் - நேரியகுளம் வீதி ஊடாக பயணிப்பவர்களும் அவதானமாக போக்குவரத்தை மேற்கொள்ளுமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (100)

# நெல் அறுவடை செய்ய முடியாது கிளிநொச்சி விவசாயிகள் அவதி

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக விவசாயிகளை அரிசி கொள்வவு செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் தெரிவிக்கையில் -

தற்பொழுது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக அறுவடை செய்வதற்கு தயார் நிலையில் இருந்த பல ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்கள் நீரில் மூழ்கி தற்பொழுது முளைக்க ஆரம்பித்துள்ளன.

விதைத்த நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளதாகவும் இது தொடர்பாக விவசாய காப்புருதி கூட்டுத் தாபனம் கடந்த ஆண்டு வெள்ளம் மற்றும் நோய் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வயல் நிலங்களை பார்வையிட்ட அதிகாரிகள் உரிய வகையில் தமக்கான அழிவிற்கு இழப்பீடு வழங்கவில்லை எனவும் ஒரு சிலருக்கு மாத்திரமே அவர்களின் வங்கிக் கணக்கில் பணம் வைப்பிளிடப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களுக்கு எந்தவித பதிலையும் வழங்காதுள்ளர் எனவும் தெரிவித்தனர்.

இம்முறையும் பாரிய அளவிலான அழிவு ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் ஆகிய நாங்களும் தற்பொழுது அரசியை கடையிலேயே கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இம்முறையாவது விவசாய காப்புறுதி கூட்டுத்தாபனம் உரிய வகையில் பார்வையட்டு எமாக்கு ஏற்பட்டுள்ள அழிவுக்கான கொடுப்பவை வழங்க வேண்டும் எனவும் இல்லாவிடில் தொடர்ச்சியாக நெற்செய்கை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர் எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். 113







# சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் மறைந்தார்

சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தனது 75 ஆவது வயதில் காலமானார்.

இவர் 'ராவய' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியராக கடமையாற்றினார்.

1949 ஜூன் 26ஆம் திகதி பிறந்த இவர் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார்.

அச்சமற்ற செய்தி அறிக்கையிடல் மற்றும் கூர்மையான வர்ணனைக்கு பெயர் பெற்ற இவர், இலங்கை ஊடகங்களில் ஒரு முக்கிய நபராக தனது இடத்தை உறுதிப்படுத்தியிருக்கிறார்.


பத்திரிகை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கான அவரது அர்ப்பணிப்பு அவருக்கு பரவலான மரியாதையைப் பெற்றுத் தந்தது.

'ராவய' பத்திரிகை தொடங்கப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் அதன் ஆசிரியராகப் பணியாற்றினார். விக்டர் ஒரு புலனாய்வு பத்திரிகையாளர், அரசியல் விமர்சகர், கோட்பாட்டாளர், சமூக ஆர்வலர் மற்றும் பல புத்தகங்களையும் எழுதியுள்ளார்.

1971 இளைஞர் கிளர்ச்சி தொடர்பான பிரதான நீதிமன்ற வழக்கில் அவர் 7ஆவது குற்றவாளியாக இருந்தார். சந்தேகத்துக்குரிய அனைத்து பிரதிவாதிகளிலும் மிகவும் வண்ணமயமான நபர் என்று நீதிபதிகள் குழு அவரை விவரித்தது. விசாரணையின் முடிவில் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைவாசத்தின்போது அவர் ஜே.வி.பியின் கோட்பாட்டையும் மார்க்ஸியத்தின் கோட்பாட்டையும் கைவிட்டார். வன்முறைக் கோட்பாட்டை நிராகரித்த அவர், மகாத்மா காந்தி விளக்கிய அஹிம்சை தத்துவத்தை ஏற்றுக்கொண்டு அதனை தீவிரமாகப் பின்பற்றுபவராக மாறினார்.

தெற்கில் சிங்களவர்களாலும் வடக்கில் தமிழர்களாலும் வன்முறைகள் வெடித்ததால் நாடு கொந்தளிப்பில் இருந்த 1986ஆம் ஆண்டு



விக்டர் ஐவன் பத்திரிகைத் துறையில் நுழைந்தார். அவர் தொடங்கிய 'ராவய' என்ற மாத இதழ் விரைவில் வாசகர்களிடையே பிரபலமடைந்து, அந்த நேரத்தில் அதிக தேவை கொண்ட பத்திரிகையாக மாறியது. இந்த பத்திரிகை ஊடாக அவர் பல்வேறு உண்மைகளை வெளிக்கொணர்ந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கஞ்சாவுடன் ஒருவர் நெடுங்கேணியில் கைது

நெடுங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுங்கேணி பொலிஸ் அதிகாரிகள் குழுவிற்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் பெரிய குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடையவர் ஆவார்.

கைதான நபரிடமிருந்து 02 கிலோ 140 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குருநகரில் நேற்று மினி சூறாவளி சில கட்டடங்களின் கூரைகள் சேதம்

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை வேளை வீசிய சிறியளவு சூறாவளி காரணமாக சில கட்டடங்களின் கூரைகள் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் லயன் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் சூரியராஜ், கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உள்ளிட்டவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.



வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# மன்னார் துப்பாக்கிச் சூட்டு சந்தேகநபர்களான இராணுவ சிப்பாய் உட்பட மூன்று பேர் கைது

மன்னார் நீதிமன்றத்துக்கு முன் கடந்த வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ சிப்பாய் ஒருவர் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தில் பணியாற்றும் சிப்பாய் மன்னார் -தலைமன்னார் பிரதான வீதியில் நடுக்குடா கடற்கரை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் பின்னர், மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2022ஆம் ஆண்டு மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலை தொடர்பான வழக்கு கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது.

இந்நிலையில் விசாரணைகளுக்காக சென்ற சந்தேகநபர்கள் மூவர் உள்ளடங்கலாக நான்கு பேர் மீது நீதிமன்றத்துக்கு முன் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இருவர் உயிரிழந்ததுடன், இருவர் படுகாயமடைந்தனர்.

அதனையடுத்து, பொலிஸார் விசேட தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த நிலையில் சந்தேகநபரான இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் இந்த இராணுவ சிப்பாய் கைது செய்யப்பட்டு பேசாலை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து, விசாரணைகள் நடத்தப்பட்டன.

அதன் பிரகாரம், தொடர்ச்சியாக மேலும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் மன்னார் மற்றும் பேசாலை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

# இ.போ.சபை பஸ்ஸை வழிமறித்து தாக்குதல்

(கேதீஸ்)

நுவரெலியாவிலிருந்துதலவாக்கலை ஊடாக ஹற்றன் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸை நடத்துநரை நானுஓயா, கிளரண்டன் பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை சிலர் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்னநானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பஸ்ஸில் பயணித்த பயணி ஒருவர் பேருந்து நிற்கும் முன்னர் பஸ்ஸில் இருந்து இறங்க முற்பட்ட போது பஸ்ஸில் இருந்து தவறி விழுந்தார் எனவும், பஸ் நிற்கும் முன் இறங்குமாறு நடத்துநர் எச்சரித்ததையடுத்து இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்துடன்தொடர்புடையநபர் மற்றவர்களுக்கு தொலைபேசியில் அறிவித்ததையடுத்து, அவரின் நண்பர்கள் வந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்எனவும் பஸ்நடத்துநர் காயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுசிகிச்சைபெற்றுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதலில் ஈடுபட்ட நால்வர் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்எனவும் மேலும் ஒருவர் கைது செய்யப்படவுள்ளார் எனவும் நானுஓயா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ஸை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று தடுத்து வைத்துள்ளனர். இதன்காரணமாக நுவரெலியாவிலிருந்து ஹற்றன் நோக்கி பயணித்த பயணிகள் பல்வேறு சிரமங்களுக்குமுகம்கொடுத்திருந்தனர்.

# 41 கிலோ மாட்டிறைச்சியுடன் சாவகச்சேரியில் இருவர் கைது

யாழ். மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் மாடொன்றை இறைச்சியாக்கி விற்பனை செய்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதுடன் இவர்களிடமிருந்து 41 கிலோ இறைச்சியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் பொலிஸ்நிலையத்தில்தடுத்துவைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் இறைச்சியாக்கப்பட்ட மாடு களவாடப்பட்டதா என்பது தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.01.2025இல் வெளியிடப்பெற்றது